**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 509 | of | 2021 |
|---|---|---|---|---|

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ம் நாளான இன்று**

| | |
|---|---|
| **வாதி/பிரதிவாதி** <br> **மனுதாரர்/எதிர்மனுதாரர்** | **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.** |

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சாந்தி** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-21.01.2026**

**வா.சா.-1**

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் முதல் விசாரணை வாக்குமூல விவரங்களை என் வழக்கறிஞரிடம் நேரில் சென்று சொன்னேன். சொத்து விவரங்கள் பற்றி என் மகன் என்னிடம சொன்னார். என் மகன் ரத்தன் jewelrs என்ற நிறுவனத்தில் வேலை பார்த்தார். என் மகனுக்கு மாத சம்பளம் ரூ.50 ஆயிரம். என் மகனின் வருமானத்தை காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. என் மகன் வேலை மற்றும் வருமானத்தை காட்ட ஆவணம் தாக்கல் செய்யாததால் நான் அளிக்கும் சாட்சியம் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல. என் மகனுடன் 10 வருடங்கள் ஒன்றாக இருந்தேன். எனக்கு 1 மகன் 1 மகள் ஆவார். என்

மகள் 15 வருடங்களுக்கு முன்பு இறந்தார். என் மகள் இறப்பிற்கு பின் என் மகளுடன் வசித்து வருகிறேன். நான் என் மகளுடன் சென்று விட்டதால் தாவா சொத்தில் கூட்டு அனுபோகத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனவே நான் செலுத்தியிலுள்ள நீதிமன்ற கட்டணம் போதுமானது இல்லை என்றால் சரியல்ல. இந்த ஒரே காரணத்திற்காக வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. சொத்து வாங்குவதற்கான தொகையை எ் ன் மகன் கொடுத்தார் என்பதற்கு ஆவணம் ஆதாரம் இல்லை. 1ம் பிரதிவாதிதான் சொத்தை கிரயம் வாங்கினார் என்றும் என் மகன் தொகை எதுவும் வழங்கவில்லை என்றால் சொன்னால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே தகராறு உள்ளதால் என் வீட்டோடு சென்றுவிட்டேன். என் மருமகள் மீது நான் காவல் நிலையத்தில் புகார் தரவில்லை. 1ம் பிரதிவாதி மீது தாம்பரம் நீதிமன்றத்தில் நான் குடும் ப வன்முறை சட்டத்தின் படி மனு தாக்கல் செய்தேன் என்றால்சரிதான். அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது. மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. நான்தான் என் மருமகளுடன் வீன் தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. என் மருமகள் தமற்போதும் என்னை பராமரிக்க தயாராக உள்ளார்என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்திற்கு என் மகள் என்னுடன் வந்திருக்கிறார். என் மகளின் தூண்டுதலின் பேரில் மற்றும் கெட்ட அறிவுரை காரணமாக இநத் வழக்கு போட்டு இருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 1ம்பிரதிவாதி வேலைக்கு சென்று அந்த பணத்தை கொண்டு எல்ஐசி மற்றும் வங்கி கடன் மூலம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. என் மகன் பெயரும் கிரயப்

பத்திரத்தில் உள்ள காரணத்தினால் நான் பங்கு உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. என் மகன் கடன் தொகை எதையும் அடைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் பாகம் உரிமை கேட்டு ஆனால் கடனில் ஒரு பகுதியை அடைப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து எவ்வளவு வாடகை தொகை கிடைக்கிறது என்று வழக்கில் சொல்லவில்லை. எதன் அடிப்படையில் ரூ.1750 கேட்கிறேன் என்று வழக்குரையில் சொல்லவில்லை. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் தொடர்பு இல்லாதவை என்றால் சரியல்ல. எனக்கு சொத்தில் பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

இந்த வழக்கில் 2 சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. 2 வது அயிட்ட சொத்து பீர்க்கன்கரணையில் உள்ள flat ஆகும். அந்த flat ஐ என் மகனும் மருமகளும் 2 ம்பிரதிவாதியிடம் கடன் பெற்று வாங்கியுள்ளனர் என்ற விவரம் தெரியும். 2 ம்பிரதிவாதிக்கு என் மகளும் மருமகளும் அடமானம் எழுதி கொடுத்து அந்த அடமானக் கடன் இது நாள் வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி flat வாங்குவதற்கு என் மகன் மருமகளுக்கு நான் பணம் கொடுத்தேன் ஆனால் என்றைக்கு எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. நான் பங்களிப்பு எதுவும் செய்யவில்லை என்றும் அதனால்தான் அது பற்றி பிராதில் சொல்லவில்லை

என்றும் சொன்னால் சரியல்ல. இந்த அடமான கடனுக்கான தவனை தொகையை என் மருமகள் தொடர்ந்து செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி தெரியும். இந்த கடன் சம்மந்தமாக நான் 2ம்பிரதிவாதிக்கு ஆட்சேபனை செய்து கடிதம் எதுவும் வழங்கவில்லை. என் மகனும் மருமகளும் 2ம்பிரதவாதிக்கு அடமான கடன் பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அது செல்லாது என்று சொல்லி நான் இந்த வழக்கில் ஆட்சேபனை எழுப்பவில்லை. நான் என் மகன் இறந்த பிறகு என் மகளின் வாரிசு என்று சொல்லி என் மகனின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை 2ம்பிரதிவாதிக்கு சமர்பித்து இருக்கிறேன். ஆனால்அவ்வாறு சொல்லி கடிதம் எதுவும் 2ம்பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகன் உயில் எதுவும் எழுதி வைத்துள்ளார் என்று தெரியாது. 2வது அயிட்ட சொத்தைபொறுத்து UDS விஸ்தீரணம் தவறாக கொடுக்கப்பட்டுள்ளதுஎன்றும் அதன் காரணமாகவும் 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள என் தரப்பு ஆவணங்கள் அடிப்படையிலேயே 2வது அயிட்ட சொத்தின் மதிப்பு 36 லட்சம் என்றும் நான் அந்த மதிப்பை குறைத்து குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருக்கிறேன் என்றும் அதன் அடிப்படையிலும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தின் மீது உள்ள அடமான கடன் 2033 வரை செல்லுபடி ஆகும் என்றும், அவ்வாறு இருக்கும் போது 2ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துகட்டளை கோரியுள்ளது

யூகத்தின் அடிப்படையில் கோரப்படும் பரிகாரம் என்றால் சரியல்ல. எனவே அந்த பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி கடன் தொகை முழுவதும் அடைக்கப்படும் போது ஆவணங்களை திருப்பி தர கடமை பட்டவர்கள் என்பதால் பரிகாரம் (e) கோரியுள்ளது கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும்1ம் பிரதிவாதியும் 2வது அயிட்ட சொத்தை கூட்டாக அனுபவிப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கூட்டு அனுபோகத்தில் உள்ளதாக சொல்லி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் போதுமானது அல்ல என்றால் சரியல்ல. 2வது அயிட்ட சொத்தில் எனக்கு ¼ பாகம் உள்ளதுஎன்பதை காட்டஆவண ஆதாரம் இல்லை என்பதாலும் , அடமானக் கடன் அடைக்கப்படாததாலும் இந்த வழக்கில் எனக்கு 2வதுஅயிட்ட சொத்தை பொறுத்து பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 2வது பிரதிவாதியை பொறுத்து வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. அதன் அடிப்படையிலும் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu